1989 மே 5]

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் ஒன்றியத்தைச் சேர்ந்த கண்டிரா மாணிக்கம் பகுதி எங்களுடைய தொகுதியிலே அடங்கிய ஒரு கிராமமாகும். அங்கு தேர்வு செய்யபபட்ட 30 நபர்களுடைய பேர்களில் கடன் வழங்கப்பட்ட அந்த 11 பேர்கள் யார் யார்? விடுபட்டவர்கள் 19 பேர்கள். அவர்கள் யார் யார் விடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் அவர்களுக்கு இந்த ஆண்டு முன்னுரிமை கொடுத்து உடனடியாக கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் கேள்விக்கு, மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் எழுப்பிய வினாவில் பதில் சொல்லியிருக்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட 11 பேர்களை மட்டும் சொல்கிறேன். 30 பேர்களுடைய பட்டியலும் இருக்கிறது. அதைப் படிக்கத் தேவையில்லை. கொடுக்கப்பட்டவர்கள் பற்றி மட்டும் படிக்கிறேன். கோவிந்தராஜன், செண்பகவல்லி, சரோஜா, பாக்கியம், ராஜாபாதர், லட்சுமி, பஞ்சவர்ணம், மகாலட்சுமி, ஆறுமுகம், லட்சுமணன், ராமகிருஷ்ணன், ஆகிய 11 பேர்களுக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

சித்தேரிப் பகுதியைத் தனி ஒன்றியமாக்கல்.

219—(*வினா எண். 3499) திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதிக்கு உட்பட்ட மலைவாழ் மக்கள் வாழும் சித்தேரிப் பகுதியை தனி ஒன்றியமாக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியத்திலிருந்து 80 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற சித்தேரி மலைவாழ்ப் பகுதி, 48 கிராமங்களைக் கொண்ட ஒரு பெரும் மலை சூழ்ந்த பகுதியாகும். அங்கே இருக்கின்ற மக்கள், அது தனி ஒன்றியமாக்கப்பட வேண்டும் என்று பல்லாண்டுகளாக கோரிக்கை வைத்து கடந்த கால ஆட்சியிலே அவைகள் நிறைவேற்றப்படும்,

நிறைவேற்றப்படும் என்ற ஆசைகள் எல்லாம் வளர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்த மக்களுடைய பணிகள் நிறைவேற்றப்படுகின்ற வகையில் எதிர்காலத்திலாவது அது தனி ஒன்றியம் ஆக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் ஒரு பகுதிதான் சித்தேரி. அங்கு மக்கள் தொகை 4,690 பேர்கள்தான். ஆகவே இதற்கு என்று தனியாக ஒரு ஊராட்சி ஒன்றியம் அமைக்க இயலாது என்று அரசு கருதுகிறது.

(முற்பகல் 9-40)

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சித்தேரியின் அடிப்பகுதியில் இருக்கிற அரூர் ஒன்றியமும் அதை ஒட்டி இருக்கிற மொரப்பூர் ஒன்றியமும கிட்டத்தட்ட 90 ஊராட்சி மன்றங்களைக் கொண்ட மிகப் பெரிய ஒன்றியங்களாகும். சித்தேரியினுடைய நிலப் பகுதியில் ஏராளமான மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த இரண்டு ஒன்றியங்களிலிருந்தும் சில ஊராட்சிகளைப் பிரித்து, அவற்றை ஒரு தனி ஒன்றியமாக்கி, மொரப்பூரிலே உள்ள ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கடத்தூரிலே ஒரு ஒன்றியமாக்கினால் நிர்வாகம் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு நிதி ஒதுக்குகிற கால கட்டங்களில் 45 ஊராட்சி மன்றங்களைக் கொண்ட மொரப்பூர் ஒன்றியத்திற்கும், 20 ஊராட்சி மன்றங்களைக் கொண்ட ஒன்றியத்திற்கும் நிதியைச் சம அளவில் ஒதுக்குகிற காரணத்தால் மக்களுக்கு வசதிகள் செய்ய முடியாத நிலைமைகள் ஏற்படுகிறது. ஆகவே அந்த அடிப்படையில் நிர்வாக நலன் கருதி மாவட்டங்களை எல்லாம் இரண்டாகப் பிரிப்பதுபோல, புதிய புதிய வட்டங்களை உருவாக்குவதுபோல, மிகப் பெரிய ஒன்றியங்களைப் பிரிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய அந்தக் கேள்விக்கு நான் முன்பே பதில் சொல்லியிருக்கிறேன். இந்த சித்தேரி, பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஒரு பகுதி. இந்த ஒன்றியத்தின் மக்கள் தொகையே 81,098 பேர்கள்தான். ஆனால் அவர் இப்போது ஒன்றைச் சொன்னார்கள். அதை நான் பொதுவாகப் பயன்படுத்தி ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1961 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டபோது மக்கள் தொகை அடிப்படையிலேதான் பிரிக்கப்பட்டன. சில ஊராட்சி ஒன்றியங்களில் 10 பஞ்சாயத்துக்கள்கூட இருக்கும்.

1989 மே 5]

ஆனால் அதிலே 80,000, 90,000 மக்கள் தொகை இருக்கும். சில ஒன்றியங்களில் 30, 40, 50 ஊராட்சி மன்றங்கள் கூட இருக்கும். ஆனால் மக்கள் தொகை மொத்தத்தில் 1 லட்சத்திற்கு உட்பட்டுத்தான் இருக்கும். அந்த முறையிலே 1961-லே பிரிக்கப்பட்டது. அதிலே ஏரியா பெரிதாக இருக்கிறது, ஊராட்சி மன்றங்களும் அதிக அளவில் இருக்கிறது என்பதற்காக ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து, தனி ஒன்றியம் அமைக்க இயலாது.

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஜனத்தொகை அதிகமாகக் கொண்ட ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்து, இரண்டு ஒன்றியங்களாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

செட்டிப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம்.

220—(*வினா எண். 549) திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, செட்டிப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவுபெறும்?

(இ) இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் நிலப்பரப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்கான திட்ட அறிக்கை (பிராஜக்ட் ரிப்போர்ட்) இந்த ஆண்டு இறுதிக்குள் அரசுக்கு வரும். அந்த அறிக்கை வந்த பிறகு, அரசு அது குறித்து முடிவெடுக்கும்.

(இ) 1,785 ஏக்கர்.

திரு. பி. மாரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பகுதியிலே 1,700 சொச்சம் ஏக்கர்கள் நீர்ப்பாசன வசதி பெறுமென்று அமைச்சரவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் பாசன வசதியில்